**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.61/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(நடராஜன்)**
**03.09.2025**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. ஏற்கனவே கீரனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இதே சொத்து சம்மந்தமாக நான் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.42/2009 வழக்கில் ஏற்கனவே நடந்த வழக்குகள் பற்றி பிரதிவாதிகள் சொல்லியிருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே நடந்த வழக்குகள் பற்றி பிரதிவாதிகள் அந்த வழக்கில் கட்சி செய்திருந்தார்கள் என்றும், அந்த நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி தெரிந்துகொண்டே தற்போது தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. எனது கிரையதாரர் பரமசிவம் ஆசாரிக்கும், இந்த வழக்கு பிரதிவாதிகளுக்கும் இடையே அ.வ.எண். 104/1996 மற்றும் அ.வ.எண்.105/1996 என்ற வழக்குகள் கீரனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்றன என்ற விவரத்தை இந்த வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் ஆவது தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

3. அ.வ.எண். 42/2009 வழக்கில் மேற்கண்ட அ.வ.எண். 104/1996 மற்றும் அ.வ.எண்.105/1996 என்ற வழக்குகள் பற்றி எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் சொல்லி கட்சி செய்து வழக்கு நடத்தியுள்ளார்கள் என்றும், அதை தெரிந்துகொண்டு வேண்டுமென்றே அபத்தமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. அ.வ.எண். 42/2009 வழக்கில் என்னையும், பிரதிவாதிகளையும் முழுமையாக விசாரணை செய்து வழங்கப்பட்ட தீர்ப்பு என்றால் சரிதான். அ.வ.எண். 104/1996 மற்றும் அ.வ.எண்.105/1996 என்ற வழக்குகள் எனது கிரையதாரர்

பரமசிவத்திற்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்புகள் என்றும், அது பற்றி தெரியும் என்று சொன்னால் எனது வழக்கிற்கு பாதகம் என்பதால் தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. அ.வ.எண்.42/2009 வழக்கில் நடந்த விவரங்கள் எதையும் இந்த வழக்கில் சொல்லாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு விவரங்கள் சொன்னால் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கும், நான் சாட்சியம் அளிப்பதற்கும் சட்டப்படி இடம் இல்லை என்றால் சரியல்ல.

6. எனது கிரையதாரருக்கே தாவா சொத்தில் உரிமை இல்லை என்றும், உரிமை இல்லாத நபரிடம் நான் பெற்ற கிரையம் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல.

7. அ.வ.எண். 104/1996 மற்றும் அ.வ.எண்.105/1996 என்ற வழக்குகள் மற்றும் அ.வ.எண்.42/2009 ஆகிய வழக்குகளில் எனது கிரையதாரர் தாவா சொத்தின் உரிமையாளர் அல்ல என்றும், அவர் வாடகைதாரர் தான் என்றும், தீர்ப்பு உள்ள நிலையில் தாவா சொத்தில் எனக்கும் எவ்வித உரிமையும் ஏற்படாது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த வழக்குகளில் சுவாதீனம் மற்றும் உரிமையை எனது கிரையதாரர் இழந்துவிட்டார் என்றும், அதனால் தாவா சொத்தில் எனக்கு உரிமை மற்றும் சுவாதீனம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8. பரமசிவம் ஆசாரி எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எவ்வித உரிமையும் ஏற்படாது என்றும், அந்த ஆவணம் நீதிமன்ற தீர்ப்புகளுக்கு விரோதமான ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல.

9. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் ஏற்கனவே நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுவிட்டன என்றும், அதனால் அந்த ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்ய முடியாது என்றும் சொன்னால் சரியல்ல.

10. தாவா சொத்து சம்மந்தமான எனது கிரையதாரருக்கு எதிராக ஏற்பட்ட உத்தரவுகள் என்னையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடம்

இருந்து தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் மேற்படி பரமசிவம் தூண்டுதல் பேரில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/—திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.